## அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - “ஏ” – 2011

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ‘‘ஏ’’ இன் நிலைவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் என்பவற்றினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுப் குறைபாடு

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் காலக்கழிவு பட்டோலையில் காணப்படும் உறுப்பினர்களிற்கு கொடுக்கப்பட்ட கடன்களின் ஆண்டிறுதி மீதி உறுப்பினர்களின் உதவு தொகைப் பட்டோலையில் காணப்படும் அந்த மீதிகளிலிருந்து வேறுபட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| ஊழியர் இலக்கம் | சேலாப நிதியம் பதிவேடு “ஏ” இன் படியும் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றக்களின் படியும் கடன் மீதி | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் காலக் கழிவுப் பட்டோலையின் படி கடன் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 96 | 1,814,979.31 | 1,813,725.01 | 1,254.30 |
| 76 | 580,000.00 | 575,000.00 | 5,000.00 |
| 101 | 1,427,166.42 | 1,413,665.31 | 13,501.11 |
| 92 | 262,878.46 | 257,766.02 | 5,112.44 |
| 88 | 657,462.96 | 648,472.90 | 8,990.06 |
| மொத்தம் | 4,742,487.15 | 4,708,629.24 | 33,857.91 |

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஐந்தொகை திகதியில் உள்ளவாறு ரூபா 48,138,871 தொகையான பல ஆண்டுகளாக திரண்டிருந்த நிதியத்திற்கான வருடாந்த வங்கி பங்களிப்புகள் நிதியத்திற்கு மாற்றுவதற்குப் பதிலாக பெறவேண்டியவையாகக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் நிதியத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 5,922,971 தொகையான உறுப்பினர்களின் கணக்குகளிற்குச் செலவு வைக்கப்பட்ட வட்டியை, முன்னைய ஆண்டில் உறுப்பினர்களின் கணக்குகளிற்குச் செலவு வைக்கப்பட்ட ரூபா 6,914,930 ஆன நேரொத்த வட்டியுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 991,959 அல்லது 14.34 சதவீதத்தால் வீழ்ச்சியைக் காட்டியது. இந்த எதிர்மறையான போக்கிற்கான பிரதான காரணம் ஓய்வுபெறுதல் மற்றும் வட்டி வீதக் குறைவினால் உறுப்பினர்களின் மொத்த உதவு தொகைகளின் வீழ்ச்சியாக இருந்தது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் கடந்த 04 ஆண்டுகளில் குடைவடைந்திருந்தது. விபரங்கள் வருமாறு.

| | | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் | 759,453 | 1,714,287 | 3,335,702 | 4,822,617 |
| (ii) | உறுப்பினர்களிற்கான கடன்களின் வட்டி வருமானம் | 444,107 | 389,447 | 470,074 | 567,637 |
| (iii) | சேமிப்புக் கணக்கு மீதான வட்டி வருமானம் | 47,262 | - | - | - |
| (iv) | உருவாக்கப்பட்ட மொத்த வட்டி வருமானம் | 1,250,822 | 2,103,734 | 3,805,776 | 5,390,254 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | வங்கிக் கட்டணங்கள் | - | 1,500 | 100 | - |
| (vi) | வரிச் செலவுகள் | 599,455 | 701,570 | 1,033,539 | 997,905 |
| (vii) | தேறிய வட்டி வருமானம் | 651,367 | 1,400,664 | 2,772,137 | 4,392,348 |
| (viii) | அரச ஈட்டு முதலீட்டு வங்கி மூலமான குறைநிரப்பு உதவுதொகை | 5,271,604 | 5,514,266 | 7,358,120 | 5,408,362 |
| (ix) | மொத்த வருமானம் | 5,922,971 | 6,914,930 | 10,130,257 | 9,800,711 |
| (x) | உறுப்பினர்களிற்கு பங்களிப்பு செய்யப்பட்ட மொத்த வட்டி | 5,922,971 | 6,914,930 | 10,130,257 | 9,800,711 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2008 - 2011 ஆண்டு காலத்தின் போது நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 4,822,617 இலிருந்து ரூபா 759,453 ஆக அல்லது 84.25 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இந்த எதிர்மறையான போக்கிற்கான காரணம் நிலையான வைப்புக்களின் மீளப்பெறுதல்களாக இருந்தது.

(ஆ) 2008 - 2011 காலப்பகுதியின் போது உறுப்பினர்களிற்கான கடன்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 567,637 இலிருந்து ரூபா 444,107 ஆக அல்லது 21.76 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இந்த எதிர்மறையான போக்கிற்கான காரணம் உறுப்பினர்களினால் கடன்களின் தீர்ப்பனவாக இருந்தது.

(இ) 2010 – 2011 காலப்பகுதியில் குறைநிரப்பு உதவுதொகை ரூபா 5,514,266 இலிருந்து ரூபா 5,271,604 ஆக அல்லது 4.40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த அதேநேரம் உறுப்பினர் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்ட மொத்த வட்டி ரூபா 6,914,930 இலிருந்து ரூபா 5,922,971 ஆக அல்லது 14.34 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 2.2 உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|
| | **2011** | **2010** |
| | **ரூபா** | **ரூபா** |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | 4,947,066 | 7,426,264 |
| கூட்டு | | |
| ஆண்டில் உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் | 5,540,000 | 480,000 |
| | 10,487,066 | 7,906,264 |
| கழி | | |
| ஆண்டில் அறவீடுகள் | 2,636,670 | 2,959,198 |
| | 7,850,396 | 4,947,066 |
| கூட்டு | | |
| உறுப்பினர்களிற்கான மிகைப்பணம் மற்றும் கடன் மீதான வட்டி மீளளிப்பு | 7,708 | - |
| முன்கொண்டு செல்லப்பட்ட மீதி | 7,858,104 | 4,947,066 |

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2011 ஆம் ஆண்டில் உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 5,060,000 அல்லது 1,054.16 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொது 2011 ஆம் ஆண்டில் அறவீடுகள் ரூபா 322,528 அல்லது 10.89 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 2.3 உறுப்பினர்களின் உதவுதொகை

கணகக்காய்விற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உறுப்பினர்களின் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்ட உறுப்பினர்களின் உதவுதொகைகள் வங்கி பங்களிப்பு வட்டி என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2011 | | | | 2010 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர் களின் உதவுதொகை | வங்கி உதவு தொகை | செலவு வைக்கப் பட்ட வட்டி | மொத்தம் | உறுப்பினர் களின் உதவுதொகை | வங்கி உதவு தொகை | செலவு வைக்கப் பட்ட வட்டி | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| முன்கொண்டுவரப்பட்ட மீதி | 8,412,627 | 12,596,432 | 46,168,275 | 67,177,334 | 8,555,779 | 12,810,382 | 44,189,640 | 65,555,801 |
| கூட்டு | | | | | | | | |
| ஆண்டின் போதான உதவு தொகைகள் மற்றும் சில்லறைக் கடன்பட்டோர் | 937,789 | 1,406,705 | 5,922,971 | 8,267,465 | 1,384,229 | 2,075,998 | 6,852,407 | 9,370,109 |
| மொத்தம் | 9,350,416 | 14,003,137 | 52,091,246 | 75,444,799 | 9,940,008 | 14,886,380 | 51,042,047 | 74,925,910 |
| கழி: | | | | | | | | |
| ஆண்டின் போது செலுத்தப்பட்டது | 1,586,402 | 2,361,501 | 10,147,747 | 14,095,650 | 1,527,381 | 2,289,948 | 4,873,773 | 7,748,576 |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 7,764,014 | 11,641,636 | 41,943,499 | 61,349,149 | 8,412,627 | 12,596,432 | 46,168,274 | 67,177,334 |

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2011 ஆம் ஆண்டில் நிதியத்திற்கான உறுப்பினர்களின் உதவுதொகை ரூபா 446,440 அல்லது 32.25 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் வங்கி உதவுதொகையும் உறுப்பினர்களின் உதவுதொகைக்கு இணைவாக ரூபா 669,293 அல்லது 32.23 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2011 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 6,347,074 அல்லது 81.91 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.